REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 27உ புதன் (9—2—55) ★ ★ வெளியூர்: தை 28உ வியாழன் (10—2—55) [இதழ் 204

## ராஞ்சி ஆதிவாசிகள் தனி மாநிலம் கோருகின்றனர்

★

ராஞ்சி ஆதிவாசிகள் தங்களுக்கென ஒரு தனி மாநிலம் தேவை என திருத்தக் குழு முன் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அம்மாநிலத்திற்கு 'ஜஹாகண்ட்' எனவும் அவர்கள் பெயர் கொடுத்துள்ளனர்.

மான்பூம் மாவட்டத்திற்கு அடுத்துள்ள மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருக்கும் ஆதிவாசிகள், இங்குள்ள பார்க்கில் ஒருங்கு கூடி, தங்கள் தனி மாநில கோரிக்கையை விளக்கிக் கூறி வற்புறுத்தியுள்ளனர்.

# இந்தியப் பேரரசின் தாராளமே தாராளம்!

## பத்து மாத ஆட்சியில் ஐந்து முறை துப்பாக்கிப்பிரயோகமா?

## கொட்டமடித்த பட்டம் ஆட்சி விழ்ந்தது

### திரு-கொச்சி சட்ட சபையில் காரசாரமான விவாதம்

திருவனந்தபுரம், பிப். 8—

திரு-கொச்சி ஆட்சிபீடத்தில், கடந்த பதினொருமாத காலமாக அமர்ந்திருந்த பட்டம் தாணு பிள்ளையின் மந்திரிசபை மீது நம்பிக்கை இல்லை என்று திரு. டி. எஸ். இராமசாமி கொண்டுவந்த தீர்மானம், சபையில், பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேறியது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 60 வாக்குகளும், எதிராக 30 வாக்குகளும் கிடைத்தன; 27 உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்திருக்கின்றனர்,

ஆதரவாக திரு-கொச்சி காங்கிரஸ், தி. த. நா. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், சுயேச்சை உறுப்பினர்களில் தோழர்கள் டி. எஸ். இராமசாமி, எஸ். சட்டநாத கரையாளர் ஆகியோர் வாக்குச் செய்திருக்கின்றனர்.

தீர்மானத்தை எதிர்த்து பி. சோ., புரட்சிகர சோஷலிஸ்டு (ஆர். எஸ். பி.), கேரள சோஷலிஸ்டு (கே. எஸ் பி.) கட்சி உறுப்பினர்கள் வாக்குச் செய்தனர்.

தி. கொ. கம்யூனிஸ்டு கட்சியினரும், அவர்களைச் சார்ந்த சுயேச்சை உறுப்பினர்களும், தீர்மானத்தை ஆதரிக்காமலும், எதிர்க்காமலும் நடுநிலைமை வகித்தனர்.

புரட்சிகர சோஷலிஸ்டு, கேரள சோஷலிஸ்டு கட்சிகள் கம்யூனிஸ்டுச் சார்புள்ள ஐக்கிய இடதுசாரிக் கூட்டைச் சேர்ந்தவைகளாகும். மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இவர்களிடையே ஏற்பட்ட பிளவுகளின் காரணமாக வெவ்வேறு விதமாக வாக்குச் செய்திருக்கின்றனர்.

சட்டசபைத் தலைவர், மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் நிறைவேறிவிட்டது என்று அறிவித்ததும் சபைக் கூட்டத்தை காலவரையறையின்றி ஒத்திவைத்தார்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறியதும், முதலமைச்சர் பட்டம் தாணு பிள்ளை, அன்று மாலை இராஜப்பிரமுகரைச் சந்தித்து, சட்டசபையைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தல் நடத்த வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

அன்று மாலை, சட்டசபைக் காங்கிரஸ் கட்சியினர் கூடி, இராஜப்பிரமுகர் மாற்று மந்திரி சபை ஒன்றை அமைக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றனர்.

இராஜப்பிரமுகர், மாற்று மந்திரி சபை அமைக்க அழைத்தால், தி. கொ. காங்கிரஸ் கட்சி, நிலையான ஒரு மந்திரி சபையை அமைக்க முயற்சிக்கும் என்று, சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்த மேனன் தெரிவித்திருக்கிறார்.

★

### எல்லோரும் வந்தனர்

சட்டசபையிலுள்ள மொத்தம் 118 உறுப்பினர்களில் ஒருவர் தவிர மற்ற 117 உறுப்பினர்களும் சட்டசபையில் இருந்தனர். வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவென்று கூறப்படும் இரண்டு தி. த. நா. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இன்று, முதல் தடவையாக கூட்டத்திற்கு வந்திருந்தனராம்.

★

### ஜனாதிபதி ஆட்சி ஏற்படலாம்?

எர்ணாகுளம், பிப். 8—

பட்டம் தாணு மந்திரி சபைக்கு தி. கொ. காங்கிரஸ் அளித்துவந்த ஆதரவை நிறுத்திக்கொண்டதின் பிறகு, மாநிலத்தில், சட்டம், அமைதி ஆகியவற்றின் நிலைமை மோசமாகி விட்டதென்றும், போலீஸ் இலாகா செயலற்றுப் போய்விட்டதுபோல் காணப்படுகிறது என்றும், தி. கொ. காங்கிரஸ் கட்சிக் காரியதரிசி மாதவன் நாயர் இங்கு தெரிவித்திருக்கிறார்.

" நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிட்டதின் விளைவாக, தி. கொ. மாநிலத்தில் ஜனாதிபதி நேரடி ஆட்சி ஏற்படுவதை காங்கிரஸ் கட்சி வரவேற்காது; என்றாலும், அப்படி நடைபெறாது என்று சொல்லி விடுவதற்குமில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

★

### இராஜப்பிரமுகர் — மத்திய சர்க்கார் தொடர்பு:

தி. கொ. மாநில அரசியல் நிலைமை குறித்து, இராஜப் பிரமுகர், மத்திய சர்க்காருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## திரு-தமிழக எம்.எல்.ஏ. கைது!

திருவனந்தபுரம், பிப் 8—

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பி. ராமசாமி எம். எல். ஏ., இன்று மாலை இரணியலில் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

ஏற்கனவே, இவர் முன்னாள் நடந்த திரு—தமிழக இணைப்புப் போராட்ட வழக்குகளில் எதிரியாகச் சேர்க்கப்பட்டு கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதும் அறிந்ததேயாகும்.

கைது செய்யப்பட்ட பி. ராமசாமி தக்கலை விசேட மாஜிஸ்திரேட் முன்பு நிறுத்தப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இன்றுகாலை நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பட்டம் மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை பிரேரித்து தோழர் ராமசாமி பேசுகையில், "பட்டம் தாணுவின் தலைமையில் உள்ள ம. சோ. மந்திரி சபை, மாநிலத்தில் உள்ள சிறுபான்மை மக்களை நசுக்கவும், மக்களின் உரிமைகளுக்கு ஆபத்து ஏற்படும் வகையிலும் செயலாற்றி வருகிறது. மேலும் அந்த மந்திரி சபை, நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கவும் தவறிவிட்டது" என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார்.

பட்டம் சர்க்காரின் போக்கு பாசீசப் போக்காகவே இருக்கிறது என்று கூறிய அவர் மேலும் குறிப்பிட்டார்:—

" ம. சோ. கட்சியின் தேர்தல் அறிக்கையில், மொழிவழி மாநில அமைப்பு இடம் பெற்றிருக்கிறது என்பதை மந்திரி சபைக்கு நினைவூட்டுகிறேன். தென்திருவாங்கூர் தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் சேர வேண்டுமென்று கோருவது நியாயமெனவே நான் உணர்கிறேன். தி. த. நா. காங்கிரசைப் பற்றி எனக்கெனத் தனி அபிப்பிராயம் இருந்தாலும் கூட, மொழிவழி கோரிக்கையைப் பொறுத்த மட்டில் அவர்கள் கொள்கையில் எனக்கு உடன்பாடு உண்டு

திரு-தமிழக சிறுபான்மையினர் மீது, பட்டம் சர்க்கார் கொண்டிருக்கும் போக்கினை அங்கு நடந்த துப்பாக்கிப் பிரயோகம் தெளிவாக எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

தமிழ் நாடு பகுதியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டால் சுட்டுவிடுவேன் என்று மிரட்டுகிற வகையில்,

(4-ம் பக்கம் பார்க்க)

## நாற்பத்தோராயிரம் அகதிகளுக்கு ரூ. 9-கோடி நஷ்ட ஈடு!

### 19 லட்சம் ஏகர் நஞ்செய் நிலமும் காணிக்கை

பாகிஸ்தானில் சொத்துக்களை விட்டுவந்த 41,000 அகதிகளுக்கு மட்டும் சென்ற மாத முடிவுவரையில் ரூ. 9 கோடிவரை நஷ்ட ஈடாக இந்தியப் பேரரசால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகவலை அகதிகள் அமைச்சராக இருக்கிற மேகர்சந்த் கன்னா அறிவித்துள்ளார்.

இப்பெருந் தொகையில் 75 சதவிகிதம் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ரூ. 6,60,00,000 ரொக்கப் பணமாக நஷ்ட ஈடு தரப்பட்டிருக்கிறது.

இந்த ரொக்கத் தொகை நீங்கலாக, அகதிகளுக்கு நஷ்ட ஈடாக 19 லட்சம் ஏகர் நஞ்செய் நிலமும் காணிக்கையாக அளிக்கப்பட்டிருக்கிறது.

## சோவியத் ஆட்சிபீடம் கை மாறுகிறது

### மாலெங்காவ் இராஜினமா

### புல்கானின் புதுப் பிரதமராகிறார்

### நிகிதா குருஷ்சேவ் சர்வாதிகாரம் பெறுகிறார்

மாஸ்கோ, பிப். 8—

சோவியத் ரஷ்யாவின் பிரதம மந்திரியாயிருந்த எம். ஜியார்ஜி மாலெங்காவ் தனது பதவியை இன்று இராஜினமா செய்துவிட்டார்.

மார்ஷல் நிகோலாய் அலெக்ஸான்ட்ரோவிச் புல்கானின் என்ற பாதுகாப்பு மந்திரியாயிருந்தவர் பிரதம மந்திரியாக நியமனம் பெற்றிருக்கிறார்.

மாலெங்காவின் இராஜினமாவும், புல்கானின் நியமனமும் சோவியத் மக்கள் சபைக் கூட்டுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

மாலெங்காவ் தான் மக்கள் சபைக்கு எழுதியிருந்த இராஜினமா கடிதத்தில் தனக்கு போதுமான இராஜரீக அனுபவமில்லை என்றும், தனது நிர்வாக அனுபவமின்மையை தான் உணர்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

பத்து நிமிட நேரத்தில் அவரது இராஜினமாவை சபை ஒருமனதுடன் ஏற்றுக்கொண்டது.

இரண்டரை மணி நேரம் கழித்து மீண்டும் சோவியத் மக்கள்சபை கூடியபோது, கம்யூனிஸ்டுக் கட்சி முதல் செயலாளரான நிகிதா குருஷ்சேவ், மார்ஷல் புல்கானின் புதிய பிரதமராக வேண்டுமென்று பிரரேபித்தார்.

புல்கானின் இதுவரை பிரதமர் மாலங்காவின் கீழ் உதவிப் பிரதமராகவும் பாதுகாப்பு மந்திரியாகவும் பதவி வகித்துவந்திருக்கிறார்.

59 வயதுடைய புல்கானின் ஒருவர்தான், இப்போது இராணுவ அதிகாரிகளில், உயர்ந்த அரசாங்க அதிகாரத்தில் அமர்ந்திருப்பவர்.

கம்யூனிஸ்டு கட்சி செயலாளரான நிகிதா குருஷ்சேவுக்கும், மாலங்காவுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் மிகுந்து வருவதாக, மேற்கத்திய நாடுகளில் சூசகங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலுங்கூட மாலெங்காவின் ராஜினமா, உலகெங்கும் பெரும் பரபரப்பையும் ஆச்சரியத்தையும் மூட்டியிருக்கின்றது.

மேலும், க்ருஷ்சேவ், சென்ற வாரம் அமெரிக்க பிரசுர கர்த்தர் ஒருவருக்குத் தந்த பேட்டியின் போது தனக்கும் மாலெங்கோவிற்குமிடையில் கருத்து வேறுபாடிருப்பதாக வேண்டுமென்றே கூறப்படுவது தங்களிடையே கருத்து வேறுபாடு இருக்க வேண்டுமென்ற அவர்களது அபிலாஷையைத்தான் தெரிவிக்கிறது என்று கூறியிருக்கிறார்.

ஆனாலும் யாரும் எதிர்பாராத வகையில் மாலெங்காவ் ராஜினமாச் செய்யவும், புல்கானின் பிரதமராக நியமனம் பெறவுமான சடங்குகளை முன்னின்று நடத்தியிருக்கிறார் நிகிதா குருஷ்சேவ்.

புல்கானினை பிரதமராகப் பிர

(4-ம் பக்கம் பார்க்க)

# பெங்களூர் மாநாடுகள்—பிப். 12, 13

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 9—2—1955 புதன்

# நோக்கம் என்ன?

" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

" கண்ணுடைய ரென்பர் கற்ரேர்
முகத்திரண்டு,
புண்ணுடையர் கல்லாதவர்."

தவறின்றி பொருட்களை எண்ணவும், ஒலி மாறுபாடு தெரிந்து பொருத்தமாக உச்சரிக்கவும், பிழையின்றி திருத்தமாக எழுதவும் ஒருவன் கற்றுக் கொள்வதைத்தான், ஒவ்வொரு நாட்டுக் கல்வி ஏற்பாடும் அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. இவ்வடிப்படை முக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதேயாகும். கல்வியின் மூலமான இம் மூன்று பிரிவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டில்லாத எந்த ஒரு கல்வி ஏற்பாடும்—அது எவ்வளவு பெரிய அறிஞரால் தரப் படுவதாக இருந்தாலும்—உயர்ந்த நினைப்பில் உருவாக்கப்பட்டதாக இருந்தாலும—அது கல்வியின் பாதையிலிருந்து விலகிச் செல்லும் ஒன்றேயாகும்.

கல்வியின் கடைக்கால் போன்று உள்ள மேற்கூறிய பிரிவுகள் மூன்றையும் வலியுறுத்தும் கருத்துடன்தான், கட்டுரைத் தலைப்பில் எடுத்தாண்டுள்ள குறட் பாக்கள் இரண்டையும் பொய்யாமொழியார் வலியுறுத்தியுள்ளார் என்பது வெள்ளிடை. தன் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்குரிய ஒரு சிறந்த சாதனமாகத்தான் ஒருவன் கல்வி பெற்றாக வேண்டும்; அத்தொடர்பில் தான் கல்வி பெறுவது ஒவ்வொருவனுக்கும் இருந்துவரும் நீங்காக் கடமையாகும் என கல்வியின் தன்மையைக் கருதி இருப்பாராஞல், மேலே குறிப்பிட்டுள்ள குறள் பாக்களை வள்ளுவர் கூறியே இருக்கமாட்டார் என்பது நிச்சயமாகும்.

கல்விக்கு மூலமாக உள்ள மேற்கூறிய முப்பிரிவுகளையும் கற்றல்லாதவர்களைக் குறித்து பேசவந்த இடத்தும், அதே கல்வியின் முப்பிரிவுகளை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். அது இது :—

"விலங்கொடு மக்கள் அனையர்,
இலங்கு நூல் கற்ருரோடு
ஏனையவர்."

கற்றவர் எவர்—கல்லாதவர் எவர் என்பதை பாகுபடுத்திக் காட்ட வந்த வள்ளுவர், கல்வியின் தன்மையை, முழு நோக்கத்தை—ஒளிவு மறைவு இல்லாமல் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிருர். பழுதுபடாத பார்வையை ஒருவன் பெற்றிருந்தபோதிலும், அவன் கல்லாதவனுக இருப்பானேல், அவனுடைய பார்வைப் பொறிகள் இரண்டையும் கண்கள் என ஒப்புக்கொள்ள மறுக்கிருர்; பழுதுபடாத அக்கண்களை புண்கள் என மிகமிக இழிவாகக் குறிப்பிடுகிருர். ஒருவன் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்வது, அவன் கண் பெற்றிருப்பதிலும் முக்கியமானது எனவும், ஒருவன் கண்ணிலியாக இருந்தபோதிலும்கூட, அவன் கல்வி பெறுவதின் மூலம், அக்குறைபாட்டிலிருந்து நீங்கப் பெற்றவனுக ஆகிருன் எனவும், பார்வையிலும் கல்விக் கண் பெறுவது முக்கியம் என்பதை வலியுறுத்துகிருர் வள்ளுவர்.

ஒருவனின் இரு கண்களுக்கு ஒப்பானது எனக் கொள்ளப் படும்எழுத்தும் படிப்பும்அறியாதவனை, ஏனைய உயிர்வாழ்வனவற்றுடன் சேர்த்துவிட்டார் வள்ளுவர். விலங்கினத்திலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவதும், விலங்கிற்கில்லாத பெருமைகளை மனிதனுக்குத் தேடித் தருவதும், விலங்கினத்திடம் இயல்பாக இல்லாத—ஆனுல், மனிதனிடத்தில் மட்டுமே மறைந்துகிடக்கும் ஆக்கும் திறனை பெருக்கத் துணை புரிவதும், எண்ணும், எழுத்தையும் அடிப்படையாகக் கொண்டு விளங்கும் கல்வி ஒன்றுதான் என்ற மகத்தான உண்மையை வள்ளுவர் . மேற்காட்டியுள்ள குறள் மூலம் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

மற்ற விலங்கினத்திலிருந்து மனிதனைப் பிரித்து, மனிதனுக வளர்க்கும் ஆற்றல் கல்வி ஒன்றுக்குமட்டுமே இருக்கும் காரணத்திஞல்தான், எண்ணும் எழுத்துமே முக்கிய இடம் பெற்றுள்ள கல்வி ஏற்பாட்டை, மற்ற ஏற்பாடுகள் அனைத்தையும்விட உயர்ந்தது என, வேறு காரணத்திற்காக, புதிய கல்வி ஏற்பாடு வேண்டும் என்பவர்கள்கூட வற்புறுத்திப் பேசுகிருர்கள். அது பற்றியேதான் நாமும், கல்வி ஏற்பாட்டில் செய்யப் புகும் திருத்தங்கள் விரிவாக ஆராய்ந்து செய்யப்பட வேண்டுமென விழைகிரேம். அவ்வாறு ஆராய்ந்து செய்யப்படும் ஏற்பாட்டையும், நாடு முழுவதிலும் உடனடியாக செயலாற்ற முனையாமல், குறிப்பிட்ட சிறு பகுதியில் குறிப்பிட்ட கால அளவுவரை செயலாற்றி, நன்மை தீமைகளைக் கண்டறிய வேண்டும் எனவும், கிடைத்த முடிவைக் கொண்டு, புதிய ஏற்பாட்டை விரிவாக்குவதும் கைவிடுவதும் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும், நாம் மன்ருடுகிரேம்.

எண்ணும் எழுத்தும் கல்வியின் அடிப்படையாக இருப்பதினல், அவ்விரண்டையும் இளஞ்சிருர்களுக்குச் செவ்வனே அளிப்பதே ஒரு பள்ளியின் முதற் பணியாகும் என்பது சொல்லாமலே விளங்கும். ஒரு பள்ளியின் மூலநோக்கமும் அதுவேதான்.

ஆனுல், இந்தியப் பேரரசு கல்வியின் தன்மைக்கும் நோக்கத்துக்கும் வேறு பொருள் கொண்டு விட்டிருக்கிறது. கல்விக்கூடத்தை, படித்த வேலையற்றவர்களின் பணி புரியும் கூடமாக மாற்றிவிட்டிருக்கிருர்கள். ஓராசிரியர் பள்ளிகளை இந்தியத் துணைக்கண்டம் முழுதும் நிறுவ முன்வந்துள்ள இந்தியப் பேரரசு, அம்முயற்சிக்காகக் கூறியுள்ள விளக்கம் ஒன்றே போதும், கல்வியைக் குறித்து அது கொண்டுள்ள தவருன கருத்தை விளக்க.

பள்ளிக்கூடங்கள் தொழிற்சாலைகள் அல்ல, படித்து வேலையின்றி தவிப்பவர்களுக்கு வேலை தருவதற்கு. அதற்குத் தொழிற்சாலைகள் தேவை—அதிக எண்ணிக்கையில் தேவை—படித்து வேலையற்றுக் கிடப்போருக்கு, வேலைக்கமர்த்திக் கொள்வதற்கு. அப்பொழுதுதான் படித்து வேலையற்ரேரிடம் தேங்கிக் கிடக்கும் பேராற்றல் நாட்டின் செல்வமாகப் பல்கிப் பெருகும். அதை விடுத்து, ஓராசிரியர் பள்ளிகளைத் துவக்கி, ஆசிரியர் பயிற்சி பெருத படித்துப் பட்டம் பெற்றிருப்பவர்களை ஆசிரியர்களாக ஆக்குவது என்பது வீணுகும். அதற்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு காசும், கடலில் கரைத்த பெருங்காயமாகத்தான் முடியும்.

இவ்வேற்பாட்டில் உள்ள கெடுதி, இத்துடனும் நின்று விடாது. இவ்வோராசிரியர் பள்ளிகளில் கற்கும் இளஞ்சிருர்களின் கல்வித் தரமும் மிக மிக மட்டமாகவே இருக்கும். அப்பள்ளிகளில்ஆசிரியர்களாக நியமனம் பெறும் படித்தவர்களையும், சாதாரண குடிமக்கள் உயர்வாகக் கொள்ளார். மற்றப் பயிற்சிப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்குக் காட்டப்படும் மதிப்பைக் காட்டிலும், கொஞ்சம் குறைவான மதிப்பைத்தான் மேற்படி ஆசிரியர்களுக்கு பொதுமக்கள் காட்டமுந்துவர். இதன் எதிரொலியாக ஓராசிரியர் பள்ளி ஆசிரியர்களும், அறிந்தோ அறியாமலோ தங்களைக் குறித்து தாழ்வாகத் தீர்மானித்துக் கொள்ளுவர். அதன் பலஞக, ஓராசிரியர் பள்ளி நிறுவப்பட்டுள்ள ஊரில் உள்ள ஒவ்வொருவரும், தனக்குப் பகையாக உள்ளனர் எனத் தவருக அவ்வாசிரியர்கள் தீர்மானித்துக் கொள்ளும் விரும்பத்தகாத நிலையும் உருவாகக்கூடும்.

தாங்கள், ஆசிரியர் பயிற்சி பெற்றில்லாத காரணத்தினுல், இளஞ்சிருர்களின் கல்வித்தரம் குறைவது ஒரு பக்கம் இருக்க ஆசிரியர்களுக்கு ஏற்படும் தாழ் உணர்வின் காரணத்திஞலும், மேற்படி கல்வித்தரம் மேலும் பாதகமடையக்கூடும். நிற்க,

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஓராசிரியர் பள்ளி, பயன் தராதது என ஏற்கனவே முடிவு கட்டப்பட்டுவிட்ட ஒருஏற்பாடாகும். அனுபவ மூலமாகத் தோற்றுப் போனது எனக் கண்டறியப்பட்ட ஒரு ஏற்பாட்டை மீண்டும் உயிர்ப்பிக்க இந்தியப் பேரரசு முன்வந்திருப்பது பெரும் விந்தையேயாகும்.

படித்து வேலையற்றிருப்போரிடமிருந்து தம் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப்பை, கூடியமட்டில் சிறிது காலத்திற்குக் குறைத்து வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான், ஓராசிரியர் பள்ளிகளைத் துவங்கி இருக்கிறது எனக்கொள்ளுவது ஒருக்காலும் மிகையாகாது. காங்கிரசின் அரசியல் நோக்கம் தவிர, ஓராசிரியர் பள்ளி ஏற்பாட்டிற்கு நாம் அறிந்துள்ள வரையில் வேறு தக்கக் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. இதுதான், காந்திய வழி எனக் கூறப்படுவதும், காங்கிரஸ் தலைவர்களால் பின்பற்றப்பட்டு வரப்படுகிறது எனச் சொல்லப்படுவதுமான 'காங்கிரஸ் ஆத்மார்த்த அரசியல் முறை' போலும்!

# 36 கோடி மக்களில் 30 கோடி பேர் தற்குறிகள்!

## 6 கோடி பேர்களே எழுத்தறிவுடையோர்!

### இந்திய சர்க்கார் தரும் புள்ளி விபரங்கள்

"இந்தியாவிலுள்ள மொத்தம் 36 கோடி மக்களில் 6 கோடி மக்கள்—அதாவது 16.6 சதவிகிதத்தினர் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்த 6 கோடி மக்களும் ஏதாவது ஒரு மொழியில் ஓரளவுக்குத்தான் எழுதவும் வாசிக்கவும் தெரிந்தவர்களாகும்; பாக்கியுள்ள 30 கோடி மக்கள்—அதாவது 100-க்கு சுமார் 83 பேர் கல்வி வாசனையே இல்லாத வெறும் தற்குறிகள்"

இவ்வாறு, இந்திய சர்க்கார் ரெஜிஸ்திரார் ஜெனரல், இந்திய மக்களின் கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றில் மக்கள் தொகையின் புள்ளி விவரங்களைப் பற்றி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்ட 6 கோடி மக்களிலும் 6 லட்சம் பேருக்குபடிக்கத்தான்தெரியுமே தவிர, அவர்கள் எழுதத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். மேலும், 'கல்வி வாசனை பெற்றவர்கள்' என்று குறிப்பிடப்பட்ட 6 கோடி மக்களில் 5 கோடி பேர் நடுத்தரப் பள்ளி அறிவுகூட பெற்றில்லாதவர்களாவர். இந்த 6 கோடி மக்களிலும் நடுத்தரப்பள்ளி அறிவு நிலையிலிருப்பவர்கள் 90 இலட்சம் பேர் மட்டுமேதான். இந்த 90 இலட்சம் பேர்களிலும் உயர் நிலைப்பள்ளி அறிவுபெற்றிருப்பவர்கள் 38 இலட்சம் அல்லது அநேகமாக 1 சதவிகிதத்தினர் தான்.

உயர்நிலைப்பள்ளி அறிவு நிலையிலுள்ள 38 இலட்சம் பேரில் 6 இலட்சம் பேர் சிறிதளவு அதிக உயர்நிலைப் பள்ளி அறிவு பெற்றிருப்பவர்கள்; கல்லூரி நுழைவு வகுப்பு (இன்டர்மீடியட்) படித்திருப்பவர்கள் 4,66,000; டிகிரி, டிப்ளோமாக்கள் பெற்றிருப்போர் 11,70,000 பேர்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கலாச்சாரப் புள்ளி விவரங்களெல்லாம் 10 சதவிகித 'மாதிரி சர்வே' யிலிருந்து தயாரிக்கப்பட்டவை. ஆனல் கல்வித் தரம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களோ முழு மக்கள் தொகையின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளவையாகும்.

#### தென்னுட்டில் கல்வி கற்ரேர் 22·8 சதவிகிதத்தினர்!

இந்தியா முழுமையிலும் உள்ள கணக்குப்படி, படித்தவர்களின் எண்ணிக்கை முழு மக்கள் தொகையில் 16·6 சதவிகிதம் மட்டுமே. தென்னுட்டில் மட்டும் 22·8 சதவிகிதத்தவர் கல்வி பெற்றவர்களாவர். கல்வி அறிவு வாசனை அதிகக் குறைவான இடம் வடநாடுதான்.

இந்தியா முழுமையிலும் உள்ள கல்வித்தரக் கணக்குப்படி பெண்களைக் காட்டிலும் ஆண்களே அதிகம் கல்வி கற்றவர்களாகும். இந்தியா முழுமையும் கல்வி கற்ற ஆண்கள் சதவிகிதம் 24·9; பெண்கள் 7.9.

தென்னுட்டில் உள்ள பெண்கள்தான் இந்தியாவிலேயே அதிகமாக கல்வியறிவு பெற்றிருக்கிருர்கள்.

**தென்னுட்டு மக்களில் மொத்த கல்வி கற்ருரின் எண்ணிக்கையில் பெண்களின் தொகை 13·5 சதவிகிதம்; ஆனுல், அதே நேரத்தில், மிகக் குறைவாகக் கல்வி அறிவு பெற்ரேர்—அதாவது 10·8 சதவிகிதத்தினர் மட்டுமே கொண்ட வடநாட்டில் 3·6 சதவிகிதத்தினர் மட்டும்தான் கற்ற பெண்கள்!**

**இந்தியா முழுவதிலுமுள்ள மக்கள் செய்யும் தொழில் வாரியாகக் கணக்கிட்டால், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் 12 1 சதவிகிதத்தவரும், விவசாய மற்ற பிற தொழில்களிலீடுபட்டவர்களில் 29 சதவிகிதத்தவரும் கல்வி கற்றவர்களாவர்.**

நகரங்கள்—அதன் சுற்றுப்புறங்கள், கிராமங்கள்—அதைச் சூழ்ந்துள்ள இடங்கள் ஆகியவற்றில் வாழும் மக்களின் அடிப்படையிலும் இந்த கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விவரப்படி, நகரையும் நகரைச் சார்ந்த பிரதேசங்களிலுமுள்ள ஆண்களில் 54·6 சதவிகிதத்தவரும், பெண்களில் 27 சதவிகிதத்தவரும், கிராமங்களிலும்—கிராமச் சுற்றுப்புறங்களிலுமுள்ள இடங்களில் வாழும் ஆண்களில் 24 சதவிகிதத்தவரும், பெண்களில் 6 சதவிகிதத்தவரும் கல்வி அறிவு பெற்றவர்களாகும்.

**தென் இந்தியாவில் மட்டுமுள்ள நகர் — நகரைச் சார்ந்த இடங்களில் உள்ளவர்களில் 59·1 சதவிகித ஆண்களும், 30 8 சதவிகித பெண்களும், கிராமம்—கிராமச் சுற்றுப்புறங்களில் 34·8 சதவிகித ஆண்களும் 12·7 சதவிகித பெண்களும் கல்வி பெற்றவர்களாவர்.**

மேற்கண்ட புள்ளி விபரங்கள் படி கணக்கிடும்போது, 'கல்வி பெற்ரேர்' என குறிப்பிடப்பட்ட 6 கோடி பேரில், 1,000 பேருக்கு 11 பேர் வீதம் உயர்நிலைப் பள்ளியறிவு பெற்றிருக்கிருர்கள். இவர்கள்தான் மேற்குறிப்பிட்டுள்ள 38 இலட்சம் உயர்நிலைப் பள்ளி நிலையில் இருப்பவர்கள். இந்த 38 இலட்சம் பேரிலும் 5 இலட்சம் பேர்தான் பெண்கள்!.

டிகிரி, டிப்ளோமாக்கள் பெற்றிருக்கும் 11·7 லட்சம் பேர்களில் ஆண்கள் 9,93,304; பெண்கள் 1,83,094.

இந்தியாவிலேயே கல்வித்தரம் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது மேற்கு இந்தியா ஆகும். மேற்கிந்தியாவில் கல்வியறிவு பெற்றிருப்போர் 23 8 சதவிகிதத்தினராவர்; அதற்கடுத்தபடியாகத் தென்னுட்டின் கல்வியறிவு நிலை இருக்கிறது.

# மத்திய பிரதேச அதிகாரி டிஸ்மிஸ்!

## சர்க்கார் பணத்தைக் கையாடினராம்

குவாலியர், பிப். 6—

மத்திய பாரத் சர்க்கார் விவசாய இலாகா அதிகாரியான எல். என். மாத்தூர் என்பவரை சர்க்கார் டிஸ்மிஸ் செய்திருக்கிறது.

சர்க்கார் கணக்கில் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபட்டதாகவும், பணத்தைக் கையாடியதாகவும் இந்த அதிகாரியின் மீது குற்றம் சாட்டப்பட்டதாம்.

விசாரணையில் இக்குற்றச்சாட்டுகள் நிரூபணமாகிவிட்டன என்று சர்க்கார் அறிக்கை என்று தெரிவிக்கிறது.

இவர் 1953 பிப்ரவரியிலிருந்து 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருந்தார்.

---

வட பீகாரிலுள்ள பூசாவிலிருக்கும் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், 1905-ம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது.

# 'படித்த வேலையற்றோர் பிரச்சினை நாட்டிற்கு ஓர் அறைகூவலாகும்'

## டாக்டர் ஏ. இராமசாமி எச்சரிக்கை

"படித்தும் வேலையில்லாமல் இருப்போரின் பிரச்சினை இன்றைய நாட்டிற்கு விடப்படும் பெரியதோர் அறைகூவலாகும். திறமை கொண்டவர்கள்—திறமையற்றவர்கள், தொழில் நுட்பத் துறையினர், படித்தவர்கள்-ஆகிய இவர்களுக்கு வேலை தரவேண்டிய வழிகளைக் காணவிட்டால், இந்த 'மிகப் பயங்கரமான ஆபத்து' நிச்சயமாக நம்மை மூழ்கடித்துவிடப் போகிறது."

*இவ்வாறு, எர்ணாகுளத்துக் கருகிலுள்ள கலாமசேரியிலுள்ள சர்க்கார் பல தொழில் நுட்பத் துறைக் கழகத்தின் 4-வது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு—கொச்சி பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்.*

மேலும் அவர் கூறினார் :—

"நாட்டை நோக்கி இருக்கும் இரண்டு முக்கிய பிரச்சினைகளில் ஒன்று—நாட்டிலே நல்ல முறையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை. இரண்டாவதுபலதொழில் நுட்பத் துறைகளினின்றும் தேர்வு பெற்று வெளிவருவோருக்கு தகுதி வாய்ந்த வேலைகள் கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையில் ஈடுபடும் அளவிற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படவேண்டும்.

"நாட்டிலேயுள்ள பல்கலைக் கழகங்களிலுமிருந்தும் நாடு பெரியதோர் பொறுப்பை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. நாட்டுக்குத் தேவையான தலைவர்களை—தகுதி மிக்கதலைவர்களையெல்லாம் பல்கலை கழகங்கள்தான் தயார் செய்து அனுப்பவேண்டும்; அந்தத் தலைவர்கள், அரசியல் துறைத் தலைவர்களாக மட்டுமில்லாமல், நாட்டின் தேவையான ஒவ்வொரு துறைக்கும் தகுதியான தலைவர்களை தயாரிக்கவேண்டும். பிறநாடுகளைப் போலவே இந்தியாவிலும் இருக்கும் ஏராளமான கல்லூரிகள் இவ்வகையான தலைவர்களை உருவாக்குவதில் முழு பொறுப்பும்—முக்கிய பொறுப்பும் ஏற்றுக்கொள்ளவேண்டும்."

## புத்தரின் பாதையில் பிரிட்டிஷ் சிப்பாய்

### இராணுவத்திற்குத் திரும்புமாறு உத்தரவு

கோலாலம்பூர், பிப். 8—

இங்குள்ள பிரிட்டிஷ் சிப்பாய் ஒருவர் புத்த மதத்தை தழுவிய செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

சாய்பர் எரிக் ஹாலந்த் என்னும் இந்த சிப்பாய் லங்காஷயரைச் சேர்ந்தவர். விடுமுறையில் இருக்கும் இந்த சிப்பாய், 12 அடி உயரமுள்ள புத்தர் சிலை முன் நின்று, புத்தரின் பத்து கோட்பாடுகளை ஒத்துக் கொள்வதாகக் கூறி, புத்த மதத்தைத் தழுவினார்.

ஆனால், இந்தச் சிப்பாய் பணியாற்றும் படையின் காப்டன் கெல்லி என்பவர், இவரை உடனே இராணுவத்திற்குத் திரும்பி வருமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்தச் சிப்பாயின் தாய்தந்தையர், இவர் புத்த மதத்தைத் தழுவுவதை எதிர்த்துத் தந்திபடித்தார்களாம்.

புத்த மத உடையில் தோன்றிய ஆங்கிலச் சிப்பாய், 'நீங்கள் இந்த உடையில் என்னைக் காண்பதற்கு ஆச்சரியப்படுவீர்கள்; ஆனால், நான் நீண்ட காலமாகவே புத்த மதத்தைத் தழுவுவதுபற்றி ஆலோசனை செய்து வருகிறேன்," என்று கூறினாராம்.

"உலகத் துன்பங்களையெல்லாம் போக்க புத்த மதமே சிறந்தது; நான் ஆங்கில நாட்டு சர்ச்சின் முறைப்படி உள்ள கிருத்துவ மதத்தைக் கைவிட்டு விட்டேன்," என்று அவர் குறிப்பிட்டார்

தான் புத்த மதத்தைத் தழுவுவது பற்றி தனது தாய் தந்தையருக்குத் தெரிவித்து விட்டதாகவும், அவர்கள் அதை மறுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சென்னை நகரசபை தேர்தல்

### ஆகஸ்டு மாதத்தில் நடைபெறும்?

சென்னை நகரசபை தேர்தல் ஒத்திப் போடப்படாவிட்டால் அடுத்த ஆகஸ்டு—செப்டம்பர் திங்களில் நடைபெறலாம். நகரத்திலுள்ள மொத்த மக்கள் தொகையான 15 லட்சத்தில் 9 லட்சம் வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு வாக்களிப்பார்கள்.

சென்னை நகரம் இப்போது 50 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 78 உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களுள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 5 இடங்களும், தொழிலாளருக்கு 4 இடங்களும், பெண்களுக்கு 4 இடங்களும், மற்ற நிறுவனங்களுக்கு 10 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நகர சபை கமிஷனரின் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுமானால் நகர சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 96 ஆக உயரும்.

அதோடு, சென்னை நகரம் 63 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நகர சபையிலும் தாழ்த்தப்பட்டோர், பெண்கள் ஆகியோருக்குப் பிரதிநிதித்துவம் உயர்த்தவும் கமிஷனர் சிபாரிசு செய்திருக்கிறார்.

தேர்தல் பட்டியல் பற்றிய வேலைகளைக் கவனிக்க உதவி ரெவினியூ அதிகாரி ஒருவர் நியமிக்கப் படவேண்டுமென கமிஷனர் சர்க்காரைக் கேட்டுக்கொண்டதாகவும், அதை சர்க்கார் மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## தோட்டப் பயிர்கட்கு விவசாய வருமான வரி

### பொறுக்குக்குழுவின் திருத்தங்கள்

சென்னை, பிப். 6—

தோட்டப் பயிர்கட்கு விவசாய வருமான வரிவிதிப்பு மசோதா சம்பந்தமாக சென்னை சட்டசபை பொறுக்குக் குழு செய்த திருத்தங்களடங்கிய மசோதா, சென்னை சர்க்கார் அறிக்கையொன்றில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒரே மாதிரியான வரி விகிதம் இருக்க வேண்டுமென்றும், உபரி வரி எதுவுமில்லாமல் ரூபாய்க்கு $5\frac{1}{2}$ அணா உயர்ந்தபட்ச வரியாக இருக்க வேண்டுமெனவும் பொறுக்குக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

ரூ. 1500-க்குக் குறைவான விவசாய வருமானத்திற்கு வரி கிடையாதென்றும், ரூ. 1500—3500 வரையிலுள்ள வருமானத்திற்கு ரூபாய்க்கு 9 பைசா ($\frac{3}{4}$ அணா) என்றும், ரூ. 3500—5000 வரையிலுள்ள வருமானத்திற்கு ரூபாய்க்கு ஒன்றரை அணா என்றும், ரூ 5000—10,000 வரையிலும் ரூபாய்க்கு இரண்டரை அணா என்றும், ரூ. 10,000—15,000 வரை ரூபாய்க்கு மூன்றரை அணா என்றும், ரூ 15,000—20,000 வரை ரூபாய்க்கு 4 அணா என்றும் வரி விதிக்கப்பட வேண்டுமென்று வரி விகிதங்கள் பற்றி அக்குழு தனது சிபாரிசைச் செய்திருக்கிறது.

புதுச்சேரியில், கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக, இந்திய சர்க்கார் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் அனுமதித்துள்ளனர்.

## அடிக்கடி வழக்குகள் ஒத்திப்போடுவதைத் தடுக்க!

### நீதிபதி கூறும் புதிய வழி

கும்பகோணம், பிப். 6—

நீதிமன்றங்களில் அடிக்கடி வழக்குகள் ஒத்திப்போடுவதைத் தவிர்க்க புதிய வழி ஒன்று கூறப்பட்டிருக்கிறது.

"வழக்கறிஞர்கள் தயாராக இல்லை என்பதால் வழக்குகள் அடிக்கடி ஒத்திப்போடப்படுவது இல்லை; வழக்கறிஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய 'பீஸ்' கொடுக்கப்படாத காரணத்தால் தான் அவ்வாறு ஒத்திப்போடுமாறு கேட்கப்படுகிறது.

"வழக்கு தாக்கல் செய்யப்படும் போதே, அதற்கென வழக்கறிஞருக்குத் தரவேண்டிய பணத்தை 'ஸ்டாம்பு' மூலமாக தாக்கல் செய்யுமாறு செய்துவிட்டால் அடிக்கடி வழக்குகளை ஒத்திப் போடுவது ஏற்படாது."

இவ்வாறு தஞ்சை மாவட்ட உதவி நீதிபதி ஆர். லட்சுமணன், தஞ்சை வழக்கறிஞர்கள் கழகம் தனக்களித்த உபசரிப்பின்போது குறிப்பிட்டார்.

# கம்யூனிஸ்டு கட்சியின் 'மதப் பற்று!'

## சீக்கிய மத செயற் குழுவைப் பிடிக்கப் போட்டி!

## கம்யூனிஸ்டுகள் பெற்ற முழுத் தோல்வி!

அமிர்தசரஸ், பிப். 7—

சீக்கியர்களின் தலைமை மத நிறுவனமான 'சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டி'யின் தலைவராக, அகாலிதளத்தின் தலைவர் மாஸ்டர் தாராசிங் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் கூட்டத்தின் போது தேர்தல் நடைபெற்றது.

தாராசிங் 117 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். அவரை எதிர்த்து தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட எஸ். சுந்தர் சிங் என்ற கம்யூனிஸ்டு அபேட்சகர் 23 வாக்குகள் மட்டும் பெற்று படுதோல்வியடைந்திருக்கிறார்.

கியானி சர்தார் சிங் என்ற அகாலிதள பொதுச் செயலாளர், கமிட்டியின் பிரதம உதவித் தலைவராகத் தேர்வு பெற்றார். அவர் எஸ். பீஷன் சிங் என்ற கம்யூனிஸ்டை தோற்கடித்தார்.

இன்னும் கியானி ஹர்சரண் சிங் ஹூடியாரா, எஸ். குர்மீத் சிங் என்ற இருவரும், முறையே உதவித் தலைவர், பொதுச் செயலாளராகத் தேர்வு பெற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது.

குறிப்பு:—'சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டி' என்ற சீக்கியர்களின் தலைமை மத நிறுவனத்திற்கு, பஞ்சாப் முழுவதும் நடைபெற்ற நிர்வாகத் தேர்தலில், கம்யூனிஸ்டுகள், மாஸ்டர் தாரா சிங் தலைமையில் உள்ள அகாலி தளத்தவருடன் 'ஐக்கிய முன்னணி' அமைத்துப் போட்டியிட்டனர் என்பது நினைவிலிருக்கலாம்.

# தேசீய சேமிப்பு இயக்கம்

## சென்னையில் வெற்றி பெறவில்லை?

சென்னை, பிப். 9—

மவுண்ட் ரோடிலுள்ள ராஜாஜி மண்டபத்தில், 8-ந் தேதியன்று ஆரம்பமான தேசீய சேமிப்பு வார விழாக் கொண்டாட்டத்தில் டெபுடி பிராந்திய தேசீய சேமிப்பு அதிகாரி திரு. ஜி. இராமச்சந்திரன் 1954-55-ம் ஆண்டுக்கான அறிக்கையைச் சமர்ப்பித்துச் செய்த சொற்பொழிவின் சாராம்சமாவது :—

"ஒவ்வொரு மாநிலமும் வசூலிக்கவேண்டிய குறைந்த பட்ச அளவுத் தொகைகளை இந்திய சர்க்கார் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இது தவிர, நிர்ணயிக்கப்பட்ட இந்த இலக்குக்கு மேலும் எந்த மாநிலமாவது வசூலித்தால், அந்த அதிகப்படியான தொகை அந்த மாநிலத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கே பயன்படுத்தப்படும் என்றும் மத்திய சர்க்கார் அறிவித்துள்ளார்கள்.

1953—54-ம் ஆண்டில், 25 மாநிலங்களில், 12 மாநிலங்கள் தங்கள் இலக்குத் தொகைகளைவிட அதிகப் பணம் வசூலித்து விட்டன; அவைகளுக்கு, அபிவிருத்திக் காரியங்களுக்காக அதிக பணம் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த 12 மாநிலங்களில் சென்னை ஒன்றாக இருக்கவில்லை. இந்த நிதி ஆண்டிற்கு சென்னை மாநிலத்திற்கான இலக்குத் தொகை ரூ. 225 லட்சம். இதுவரை 132 லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. எனவே, நாம் இலக்குத் தொகையை அடைவதற்கே 1955 பிப்ரவரி, மார்ச் மாதங்களுக்குள் சுமார் 100 லட்சம் ரூபாய் வசூலிக்க வேண்டியதிருக்கிறது; இது, கைகூடிவிடுமென்று சொல்வதற்கில்லை. எனினும், பொதுமக்கள், மாநில சர்க்கார் ஆகியோரின் தீவிர ஒத்துழைப்பும், ஆதரவும் இருக்குமேயானால், இலக்குத் தொகையைச் சேகரித்துவிடலாமென்பதே நமது நம்பிக்கை. எல்லா இலாகாத் தலைவர்களும், மாவட்ட கலெக்டர்களும் இத்திட்டத்தில் அதிக கவனம் காட்ட வேண்டுமென்று மாநில சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

பணம் சேகரிப்பை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காகத் தான் 1954-ம் ஆண்டு ஜனவரியில் பொது அதிகாரம்பெற்ற ஏஜென்சி முறை நாடு முழுவதும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது; இதன்படி நியமனம் செய்யப்பட்ட ஏஜெண்டுகளுக்கு இவர்களால் விற்கப்படும் 12 ஆண்டு தேசிய சேமிப்பு 'சர்டிபிக்கேட்'டுகளுக்கும், தேசியத் திட்ட 'சர்டிபிக்கேட்'டுகளுக்கும் $1\frac{1}{2}$ சதவிகிதம் கமிஷன் கொடுக்கப்பட்டது. இதுவும், அனேகமாக, இதற்கு முன் இருந்த பரீட்சார்த்த அதிகாரம் பெற்ற ஏஜென்சி முறையைப் போன்றதுதான்; ஆனால், முந்திய திட்டத்திலிருந்த சில குறைபாடுகள் இதில் அகற்றப்பட்டிருந்ததுடன், புதிதாகச் சில அனுகூலமான அம்சங்களும் சேர்க்கப்பட்டன; ஆனால், இத்திட்டப்படி ஏஜெண்டுகளாக வேலை செய்ய முன்வருவோர் அதிகமாக இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிறு சேமிப்புத் திட்டத்தின் வெற்றிக்கு ஏஜெண்டுகளின் சேவை அவசியம்; சிறு சேமிப்பு இயக்க வளர்ச்சிக்கு இதில் கலந்து கொள்பவர்கள் பிரசாந்த நலத்துக்கும் வழி செய்திருப்பது நல்லதுதான். அதிகமான ஏஜெண்டுகள் சேர்ந்து சேவை செய்ய முன்வந்தால் சேமிப்புத் தொகை அதிகம் சேர்க்க முடியும். ஆகையால், அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளாகத் தொண்டு புரிய அதிகமானவர்கள் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப் பிரதேசங்களில் மக்களின் சேமிப்புத் தொகைகளைத் திரட்டுவதற்காக 1952-ம் ஆண்டில், 'எக்ஸ்ட்ரா டிப்பார்ட்மென்டல் பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர்கள் ஏஜென்சி முறை' அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதுவும் சரிவர முன்னேறவில்லை. சேமிப்பு இயக்கத்தை, தனிப்பட்ட பெண் சமூக ஊழியர்கள், மாதர் நல சேவா நிறுவனங்கள் மூலம் வலுப்படுத்துவதற்காக 1953-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மாதர் சேமிப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. பொது அதிகாரம் பெற்ற ஏஜென்சி முறைப்படி கமிஷன் ரீதியில் சேமிப்புப் பத்திரங்கள் விற்பனை செய்வதற்காக சமூக சேவா நிறுவனங்கள் நியமிக்கப் பட்டன; இதுபோன்ற நிறுவனங்கள் இப்பொழுது சென்னை, ஆந்திரா, திருவாங்கூர் - கொச்சி, மைசூர் மாநிலங்களில் சுமார் 80 - இருந்துவருகின்றன. இவைகள் கூடியமட்டும் நன்கு வேலை செய்து வருகின்றன; நாளாக ஆக, இவைகள் மேலும் தீவிரமாக உழைத்து மாதர் பகுதியிடமிருந்து கணிசமான தொகையை வசூலிக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்."

## தங்கையென்று தெரியாமல் 'காதல்' மொழிந்தவர்

நாகர்கோவில், பிப். 7—

முக்காடி எனும் இடத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடற்கரையில் உலவிக்கொண்டிருந்தபோது, அங்கே தனிமையிலிருந்த தனது சொந்த தங்கையிடம் 'காதல் மொழி' பேசிக் கொண்ட செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது.

இந்த முஸ்லிம் இளைஞர் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னமேயே வீட்டைவிட்டு வெளியேறி வேறு எங்கோ இருந்திருக்கிறார். பின்னர் அவர் மீண்டும் தம் சொந்த இடம் திரும்பியிருக்கிறார். அவர் வீட்டுக்குச் செல்லாமல் நேரே கடற்கரையில் உலாவிக்கொண்டிருந்தபோது அங்கே ஒரு இளம் பெண் தனிமையாக இருக்க, அவரிடம் சென்று 'காதல்' பேச்சுப்பேச ஆரம்பித்து விட்டாராம். அந்தப் பெண்ணே தந்திரமாக அந்த இளைஞனைப் பிடித்துக்கொடுக்க எண்ணி, தான் அவரை மணந்துகொள்வதாகக் கூறி தனது வீட்டிற்கருகில் அழைத்துச் சென்று வீடு நெருங்கியதும் திடீரென கூச்சலிட்டாராம்.

பக்கத்திலிருந்தவர்கள் இக்கூச்சலைக்கேட்டு ஓடிவந்து இளைஞனைப் பிடித்துக்கொண்டார்களாம். பின்னர், அந்த இளைஞனை மேற்படி பெண்ணின் தாயார் வெகு கவனமாகப் பார்த்து, 12 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியேறிய தனது மகனே அந்த இளைஞன் என்பதை தெரிந்துகொண்டாராம்!

## நீதிபதிகளின் சம்பள உயர்வு!

### கோரிக்கையை சர்க்கார் நிராகரித்துவிட்டனர்!

சென்னை, பிப். 6—

மாவட்ட நீதிபதி, சப்-ஜட்ஜ் ஆகிய இரண்டுவேலையையும் பார்க்கிறவர்களின் சம்பளத்தை உயர்த்தவும், நேராக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றவர்களின் பென்ஷன் காலத்தை 5 ஆண்டு உயர்த்தவும், குடியிருப்பு வசதி அளிக்கவும் வேண்டும் என்ற நீதி இலாகா அதிகாரிகளின் கோரிக்கையை சர்க்கார் அங்கீகரிக்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

இந்திய அதிகாரிகள் சங்கத்தின் ஆதரவில் சென்ற ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற நீதி இலாகா அதிகாரிகள் மாநாட்டில் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# அண்ணாமலை பல்கலைக் - - கழக வெள்ளி விழா

## கல்விச் சோலை வளர்ந்த வரலாறு

சிதம்பரம், பிப். 9—

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் 25-வது ஆண்டு விழா இன்று நடைபெறுகிறது. சீரிய நோக்கம், நீண்டகால உழைப்பு—இவைதான் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தற்போதைய பெருமைக்குக் காரணமாகும்.

இயற்கை எழில் நிறைந்த பகுதியில் இப்பல்கலைக் கழகம் 600 ஏகர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

செட்டி நாட்டரசர் என்றழைக்கப்பட்ட அண்ணாமலை செட்டியாரின் முயற்சியாலும், அவரது நன்கொடையாலும் அமைக்கப்பட்டதுதான் இப்பல்கலைக் கழகம்.

இன்று திராவிடத்தின் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்ருக விளங்கும் இப்பல்கலைக் கழகத்தில் இருபது வகையான கல்வி இலாகாக்கள் இருக்கின்றன. இப்பல்கலைக் கழகத்தில் 117 பேராசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரிக் கட்டிடங்கள், மாணவர் விடுதிகள், விவசாயப் பண்ணைகள், மருத்துவ விடுதி, பேராசிரியர் சிப்பந்திகளுக்கான விடுதிகள் இவைகளுடன் அண்ணாமலை பல்கலைக் கழகம், நகரம் போல் காட்சியளித்தாலும், அது கிராமப்புற பண்புகளையே கொண்டு விளங்குகிறது.

இன்று பலரது பாராட்டுதல்களுக்கும், பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் பூரிப்புக்கும் காரணமான இப்பல்கலைக் கழகத்தின் சரித்திரம் 1918-ம் ஆண்டிலேயே ஆரம்பமாயிற்று.

தனது வாழ்நாளில் கல்வித் துறையில் தொண்டாற்ற வேண்டுமென்ற தணியாத ஆர்வம் கொண்ட அண்ணாமலை செட்டியார் 1918-ம் ஆண்டில் சிதம்பரத்தில் இருந்த 'ராமசாமி செட்டியார் நகர உயர்நிலைப் பள்ளி'யின் நிர்வாகத்தை மேற்கொண்டார். இதற்கு முன்னர் அவர், மதுரைக் கல்லூரிக்கென 40 ஏக்கர் நிலம் நன்கொடை வழங்கி அதை விருத்தி செய்ய முயன்ருர்; பலன் இல்லாமற் போயிற்று.

சிதம்பரம் ராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளி 1920-ம் ஆண்டில் கல்லூரியாக மாற்றப்பட்டது அதற்கு, 'மீனுட்சி கல்லூரி' என்று பெயர் வைக்கப்பட்டது.

இக்கல்லூரியையே பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டுமென்று அண்ணாமலை செட்டியார் முயற்சித்தார்.

இக்கல்லூரிக்கு கே. நீலகண்ட சாஸ்திரி தலைவராக இருந்தார். கல்லூரியை டாக்டர் சி. ஆர் ரெட்டி திறந்து வைத்தார். மாணவர்கள் கல்லூரிக்கு ஏராளமாக வந்து குவிந்தனர். சிதம்பரம் ரயில் நிலையத்திற்குக் கிழக்கே 100 ஏக்கர் நிலத்தில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு, அண்ணாமலை நகருக்கு மீனுட்சி கல்லூரி 1923ல் கொண்டு செல்லப்பட்டது.

தமிழர்களின்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்கத்திய நாகரிகத்தின் நல்ல அம்சங்களையும் கொண்டு அண்ணாமலை நகரில் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க அண்ணாமலைச் செட்டியார் துரிதமாக முயன்ருர்.

1927-ல், அண்ணாமலை நகரில் தமிழ்க் கல்லூரி ஒன்றும், வடமொழி கல்லூரி ஒன்றும் அமைக்கப்பட்டன.

அண்ணாமலை செட்டியாரின் கோரிக்கையின் பேரில், அண்ணாமலை நகரில் பல்கலைக்கழகம்அமைப்பது பற்றிய பிரச்சினைகளை ஆராய சென்னை சர்க்காரால் தமிழ் பல்கலைக் கழக குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்கல்லூரி தமிழ் மாவட்டங்களில் உள்ள மாணவர்களின் நலனுக்காக அமைப்பது என்று தீர்மானம் ஆயிற்று.

அண்ணாமலை செட்டியார் பல்கலைக் கழகத்திற்காக ரூ. 20 லட்சம் நன்கொடையும், 300 ஏக்கர் நிலப் பரப்பையும், கட்டிடங்கள், மாணவர் விடுதிகள் போன்றவற்றிற்கு ரூ. 20 லட்சம் பெறுமான கட்டிடங்களை நன்கொடையாக அளிப்பதாக சென்னை சர்க்காருக்குத் தெரிவித்தார். இப்பெருந்தன்மையான நோக்கை அப்போதைய சென்னை சர்க்கார் ஏற்றுக் கொண்டது.

இதன்படி, சென்னை மேல்சபையில், 1928-ம் ஆண்டு செப்டம்பர் 3ம்நாள் அண்ணாமலை பல்கலைக்கழக மசோதா கொண்டுவரப்பட்டு அக்டோபர் 12-ம் நாள் நிறைவேறியது. மசோதா 1929 - ஜனவரி 1-ம் நாள் கவர்னர் - ஜெனரலின் அனுமதியைப் பெற்றது.

இந்த மசோதா நிறைவேற தோழர்கள் டாக்டர் பி. சுப்பராயன், எஸ். சத்தியமூர்த்தி போன்ருேர் பாடுபட்டனர்.

1929-ம் ஆண்டு ஜூலையில் அண்ணாமலை பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அதுமுதல் இப்பல்கலைக் கழகம் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்து வருகிறது

இன்று, தமிழ் மக்களின் பெருமையாக உருவாகியிருக்கிற இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு தோழர்கள் எஸ். ஈ. ரங்கனுதன், சீனிவாச சாஸ்திரியார், கே. வி. ரெட்டி நாயுடு, எம். ரத்தினசாமி, டாக்டர் மணவாளராமானுஜம், டாக்டர் சண்முகம் செட்டியார் துணைவேந்தர்களாக இருந்து பணியாற்றினர்.

இப்போது சி. பி. ராமசாமி ஐயர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கிருர்.

பொறி இயல், விஞ்ஞானம், கலை, தமிழ் ஆராய்ச்சி, இசை போன்ற 20 துறைகளில் இப் பல்கலைக் கழகம் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.

இந்தியா முழுமையிலிருந்தும், மற்றும் இலங்கை, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் இப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று வருகின்றனர்.

அண்ணாமலை செட்டியாரின் பெருநோக்கால்உருவான பல்கலைக் கழகத்தை அவரது குமாரர் முத்தையா செட்டியார் நல்லமுறையில் பாதுகாத்து, அதை வளர்த்து வருகிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### அந்நிய நாட்டார் பெறும் சலுகை

பம்பாய் முதல்வர் விளக்கம்

அந்நிய நாட்டவர் இந்தியாவில் எண்ணெய் ஆலைகளை ஏற்படுத்த உரிமை அளிக்கப்பட்டிருக்கிருர்களை தவிர, அவர்களுக்கு, இந்தியருக்கில்லாத விசேட உரிமைகளோ அல்லது இந்தியரின் நலனுக்குப் பாதகமான முறையில் வேறு உரிமைகளோ எதுவும் கொடுக்கவில்லை என்று பம்பாய் மாநில முதலமைச்சர் மொரார்ஜி தேசாய், பெடரோல் வியாபாரிகள் சங்க 2-வது கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்

---

சுமார் பத்து லட்சம் புத்தகங்கள் உள்ள கல்கத்தா தேசீய நூல் நிலையம் உலகிலேயே மிகப் பெரிய நூல் நிலையமாகும்.

---

சேலம் மாவட்டத்தில்

## ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

9—2—55: மாலை 5 மணிக்கு: மோகனூர் பொதுக்கூட்டம்; இரவு 10 மணிக்கு: ஊழியர் கூட்டம்

10—2—55: மாலை 2 மணிக்கு: வேலூர் ஊழியர் கூட்டம்; மாலை 6½ மணிக்கு: பொதுக் கூட்டம்

11—2—55: மாலை 5 மணிக்கு: வெண்ணந்தூர் பொதுக்கூட்டம்; இரவு 10 மணிக்கு: ஊழியர் கூட்டம்

12—2—55: மாலை 2 மணிக்கு, காளப்பநாய்க்கன்பட்டி ஊழியர் கூட்டம்; மாலை 6 மணிக்கு: பொதுக் கூட்டம்

13—2—55: பெங்களூர் மாநாடு

14—2—55: மாலை 6 மணிக்கு: வனவாசி பொதுக்கூட்டம்; இரவு 10 மணிக்கு: ஊழியர் கூட்டம்

15—2—55: மாலை 6½ மணிக்கு: குருவரெட்டியூர் பொதுக்கூட்டம்; இரவு 10½ மணிக்கு: ஊழியர் கூட்டம்

16—2—55: அமானி கொண்டலாம்பட்டி பொதுக்கூட்டம்

தோழர்கள் எஸ். அப்பாவு, டி. கே. குருநாதன், ப. இராமலிங்கம் ஆகியோரும் சுற்றுப் பயணத்தில் கலந்துகொள்வர்.

---

## பத்து மாத ஆட்சியில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முதன் மந்திரி பட்டம் தாணு இரக்கமற்று நடந்து கொண்டிருக்கிருர்.

குழப்பம், தடியடி, சிறைக்குள் சித்ரவதை இவை எல்லாம், முதன் மந்திரி தன்னிடம் ஆதரவு கோரி வந்தவர்களிடம், பட்சமாகப் பேசியிருப்பாராளுல் தவிர்த்திருக்க முடியும். மேலும் பட்டம் தாணு பிள்ளை தமது போக்கினுல், மாநிலத்தில் உள்ள, பெரும்பான்மையினரை, சிறுபான்மையினருக்கெதிராகத் தூண்டிவிட்டிருக்கிருர்."

திரு—தமிழக உறுப்பினர் குஞ்சன் நாடார் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ம. சோ. கட்சி ஆட்சியிலிருக்கும் கடந்த 10 மாதங்களில் 5 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது.

தமிழர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை ஒட்டி நடைபெற்ற விசாரணை,சாட்சிகளாகவருபவர்களை போலீசார் அச்சுறுத்திக் கொண்டே இருந்திருக்கிருர்கள் எனும்போது எப்படி பாரபட்சமற்றதாக இருந்திருக்க முடியும் சென்னை மாநிலத்துடன் சேருகிற வரையில் அவர்கள் இந்த மாநிலத்தை சேர்ந்தவர்கள்தானே. அவர்களுக்கும் நீதியும், நியாயமும் தரப்பட வேண்டுமல்லவா? அவர்கள் நியாயமும், நீதியும் இந்த மாநிலத்தை விட்டு, வேறு ஒரு மாநிலத்தில் சென்று தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறதென்ருல் அது கண்டு, இந்த மாநிலத்தில் ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் வெட்கப்பட வேண்டாமா?"

திரு. சட்டநாத கரையாளர் என்ற திரு-தமிழக உறுப்பினர் பேசுகையில், "ம. சோ. மந்திரி சபை தனது குறுகிய கால ஆட்சியில், தமிழர்களை அங்குலம் அங்குலமாகச் சித்திரவதை செய்து கொன்றுவந்துள்ளது; இந்த நிலையிருல்தான், ம. சோ. கட்சி பொதுச் செயலாளர் பதவியை டாக்டர் ராம் மனோகர் லோகியா ராஜினுமாச் செய்தார். அதைப் போல இங்கு, தோழர் ராமசாமியும் விலகினுர்," என்று எடுத்துக் கூறியுள்ளார்.

"சென்ற சட்டசபைக் கூட்டத்தின்போது புன்னப்புரா—வயலார் கைதிகளை விடுவிக்கக் கோரினேம்; பட்டம் மறுத்தார். இப்போது தன் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரும்போது கம்யூனிஸ்டுகளைச் சரிக்கட்டுவதற்காக, பேரம் பேசி அந்தக் கைதிகளை விடுதலை செய்திருக்கிருர். இப்படிப்பட்ட ஒரு மந்திரி சபை மீது நாங்கள் எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்?" என்று காங்கிரஸ் உறுப்பினரான பி சே கருணுகரன் குறிப்பிட்டிருக்கிருர்.

விவாதத்திற்குப் பதிலளிக்கையில் பட்டம் தாணுபிள்ளை, திரு—தமிழர்கள் மீது தான் சுட்டது சரியென்ற வகையிலும், காங்கிரஸ் தங்களை எதிர்ப்பதற்குக் காரணம் தான் செய்துள்ள அபார நன்மைகள் தான் என்றும் பேசியிருக்கிருர்.

---

## புது வாழ்வு தொடக்க விழா

இலட்சியக் குன்ருக விளங்கி, கொள்கைக்காக உயிரை அர்ப்பணித்த (தி. மு. ச.) தோழர் வண்ணையம்பதி K. S. பாண்டியன் அவர்கள் திருமகள் தோழியர் P. ராஜேஸ்வரிக்கும், வட சென்னை தோழர், திராவிட இயக்க அனுதாபியும், துவரை உடைப்புத் தொழிலக உரிமையாளருமான தோழர் M. துரைசாமிக்கும், வள்ளுவர் ஆண்டு 1985 தைத் திங்கள் 29-ம் நாள் (11—2—55) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு, சென்னை, வண்ணையம்பதி, எண் 39, மணிகண்ட முதலி 1-வது தெரு, S. R. சண்முக நாடார் இல்லத்தில் (ராபின்சன் பார்க் சமீபம்) திருமணம் நடைபெறும்.

தலைவர் : வி. பி. மாணிக்கவாசக நாடார்

பேச்சாளர்கள் : அ. பொன்னம்பலனுர், கே. ஏ. மதியழகன், காஞ்சி கல்யாணசுந்தரம், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, நடிப்புச் செல்வர் எஸ். எஸ். இராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை மற்றும் பலர்.

இதையே அழைப்பாகக் கொண்டு அனைவரும் வரக் கோருகிறேம்

---

## சோவியத் ஆட்சி ...

(1-ம பக்கத்தின் தொடர்ச்சி)

தெரிவித்த அவர், "அரசியல், பொருளாதார, ராஜாங்க நடவடிக்கைகளில், புல்கானின் சிறந்த அனுபவம் பெற்றவர்; அவரது கடந்த கால அனுபவம், இப்போது பிரதமராக அவர் வெற்றிகரமாகப் பணிபுரிவார் என்பதற்கு அத்தாட்சியாகும்," என்று குருஷ்சேவ் கூறியிருக்கிருர்.

மாலென்காவ் தனது ராஜினுமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மந்திரி சபையின் தலைமைப் பீடம் உயர் திறப்பாடு மிகுந்ததாயிருக்க வேண்டுமென்பதற்காகவும், அரசாங்க அனுபவம் மிகுந்த ஒருவர் பிரதம மந்திரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவுமே, நான் ராஜினுமாச் செய்கிறேன்

"உள்நாட்டு விவகாரங்களில் எனது அனுபவக் குறைவை நான் தெளிவாக உணர்கிறேன். அதனுல் பொறுப்பும் சிக்கலும் மிகுந்த பிரதம மந்திரி பதவியைத் திறம்பட வகிக்க முடியாது போகிறது

"ஒரு மந்திரி சபை அல்லது ஒரு 'டைரக்டரேட்' அந்தஸ்தில் தரப்படுகிற தேசியப் பொருளாதாரப் பிரிவை நேரடியாக அமுல் நடத்துகிற அனுபவம் எனக்கு அறவே இல்லை.

"நமது கம்யூனிஸ்டு கட்சியும், தொழிலாளர்களும் விவசாய அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காக விசேட முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இச்சமயத்தில், நான் பல ஆண்டுகளாய்ப் பொறுப்பேற்று நிர்வகித்து வந்த விவசாயத் துறையில் இன்றுள்ள அதிருப்தியான நிலைகளுக்கு நானே காரணமாகவும், குற்றவாளியாகவும் இருந்திருக்கிறேன் என்பதையும் என்னுல் தெளிவாக உணர முடிகிறது என்றும், நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

"கம்யூனிஸ்டு கட்சி, ஏற்கனவே மத்திய கமிட்டியின் தலைமையில் சிறந்த திட்டங்களைத் தீட்டி விவசாயத் துறையில் உள்ள குறைகளை நிறை செய்ய வேலை செய்து வருகிறது.

"கம்யூனிஸ்டு கட்சி திட்டப்படி, கன இயந்திர வளர்ச்சியைப் பொறுத்துத்தான் விவசாய வளர்ச்சி இருக்க முடியும்; அந்தத் திட்டமே மிகச் சீரியதாகும்; அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதுதான் இன்று பின்தங்கியுள்ள நிலையிலிருந்து விவசாயம் அபிவிருத்தியடைய வழியாகும்."

மேலும் அவர் தனது கடிதத்தில், தனது ராஜினுமா குறித்து முதலாளித்துவவாதிகள், பலவகையான பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபடலாம் என்றுலும், கம்யூனிஸ்டுகளாகிய நாம்—சோவியத் மக்கள் அந்தப் பொய்யுரைகளை அலட்சியம் செய்துவிடவேண்டும். தாயகம், மக்கள், கட்சி, இவற்றின் நலன்தான் வேறெல்லாவற்றையும் விட நம் ஒவ்வொருவருக்கும் முக்கியமாகும் என்றும், தான் பிரதமராக இருந்து விலகிக்கொண்ட பின், தனக்குத் தரப்படும் புதிய பொறுப்பினை கட்சிக்கும், சோவியத் மக்களுக்கும் விசுவாசத்துடன் நின்று பணி புரிவேனென்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

சோவியத் ரஷ்யா பிரதமர் பதவியை ராஜினுமா செய்துள்ள மாலன்காவுக்கு 53 வயதாகிறது. கடந்த 1953-ம் ஆண்டு மார்ச்சு திங்களில், ஸ்டாலின் மரணமுற்றதும், இவர் பிரதமர் பதவியை ஏற்ருர். ஸ்டாலினது இறுதிக்காலத்தில், மாலன்காவ், 'ஸ்டாலினுடைய வலது கரம்' என்று கருதப்பட்டார்.

---

# ஒப்பந்தம் பலன் தருகிறது

லண்டன், பிப். 8—

சிங்கப்பூரில் புதிய போர் விமானங்களுடன் விமானதளம் ஒன்றை அமைப்பது பற்றி பிரிட்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வொப்பந்தம் தென் கிழக்கு ஆசிய பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையுமென்றும் கூறப்படுகிறது.

---

## மணமகன்கள் தேவை

★

நல்ல குடும்பத்தில் பிறந்த வசிகரமுள்ள 20 வயது பெண்ணுக்கும், 22 வயதுள்ள மற்ருெரு பெண்ணுக்கும் சீர்திருத்த கொள்கை கொண்ட மணமகன்கள் தேவை. விபரங்களுக்கு நேரிலோ அல்லது தபாலிலோ கீழ்க்கண்ட முகவரியில் தெரிந்துகொள்ளலாம்.

பொறுப்பாளர், 'தமிழ் மலை,'
13, அருணுசல ஆச்சாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை—5

---

### சென்னை தமிழாசிரியர் கழகம்

10—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை, அம்மன் கோவில் தெருவிலுள்ள டாக்டர் குருசாமி முதலியார் தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளியில், திரு. கெ. து சுந்தரவடிவேலுவைப் பாராட்ட, திரு. என். சோமசுந்தரம் தலைமையில் மேற்படி கழகம் கூடும். பலர் பாராட்டுரை வழங்குவர்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணுதுரை, எம் ஏ.